செ.வெ.எண் -42 நாள்:11.02.2020

# அரியலூர் மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், அஸ்தினாபுரம், தாமரைக்குளம், சீனிவாசபுரம் ஆகிய கிராமங்களில் வேளாண்மைத்துறையின் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

அஸ்தினாபுரம் கிராமத்தில் விதைப்பண்னை திட்டத்தின் கீழ் கருணாமூர்த்தி என்பவர் 1எக்டர் பரப்பளவில் பயிரிட்டுள்ள நிலக்கடலை ஜி.ஜே.ஜி 9 என்ற ரகத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ரகம் உயர் விளைச்சல் கொடுக்கக்கூடிய ரகமாக உள்ளது. வேளாண்மைத்துறையின் மூலம் அரியலூர் மாவட்டத்தில் அதிகபடியான பரப்பளவில் பயிரிடுவதற்காக விதைப்பண்ணையும் அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர், திரு.இராஜேந்திரன் என்பவர் வயலில் 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மழைதூவான் மூலம் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை வயலை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மழைதூவான் மூலம் நீர் தெளிக்கும்போது, குறைவான நீரில் அதிகமான பரப்பிற்கு தெளிக்கப்படுகிறது. இதன் மூலம் குறைந்த செலவில் அதிக இலாபம் ஈட்டப்படுகிறது.

மேலும் தாமரைக்குளம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் திரு.ரெங்கராஜ் என்பவரின் வயலில் ரூ.4000/- மானியத்தில் வழங்கப்பட்ட சூரிய மின்விளக்கு பொறி பயிரிடப்பட்டுள்ள நெல் வயலை பார்வையிட்டார். இந்த பொறியின் மூலம் தீமை செய்யும் பூச்சிகளை எளிதாக அழித்துவிட முடிகிறது. மேலும், பூச்சி மருந்து தெளிக்கும் செலவும் விவசாயிகளுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, மேற்கு சீனிவாசபுரம் கிராமத்தில் விவசாயி திரு.சுந்தரம் என்பவர் இயற்கையான முறையில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை வயல்களையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, வேளாண்மை துணை இயக்குநர் இரா.பழனிசாமி வேளாண்மை உதவி இயக்குநர்கள் (தக) சுரேஷ், அ.சவீதா மற்றும் வேளாண்மை அலுவலர்கள் முருகன், ரமேஷ்குமார் உதவி விதை அலுவலர் கொளஞ்சி மற்றும் அட்மா உதவி தொழில் நுட்ப மேலாளர் செ.சுந்தரமூர்த்தி ஆகியோர் உடனிருந்தர்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**